**OS.No. 132/2015**

**Date: 19.09.2022.**

**பிசா.4 மீண்டும் மனுவின் பேரில் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் என் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை ஞாபகப்படுத்தி சொன்னேன். உயில் எழுதிவைத்ததாக சொல்லப்படும் நபரை அதற்கு முன்பு எனக்கு தெரியாது. Professor கோவிந்தராஜ்அறிமுகப்படுத்திதான் தெரியும். Professor எந்த கல்லூரில் வேலைபார்த்தார் என்று எனக்கு தெரியாது. நான் நடை பயிற்சி செய்யும் போதுதான் அவர்எனக்கு பழக்கம். உயில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் காலத்தில் தஞ்சாவூர் கீழராஜவீதி, திவ்யா Sweet Stal எதிரில் என்னுடைய அலுவலகம் இருந்தது. கோவிந்தராஜ் அவருக்கு தெரிந்தவருக்கு உயில் எழுதவேண்டும் என்று ஏப்ரல் கடைசி வாரத்தில் சொன்னார். உயில் எழுதிய நபரின் வீட்டிற்கு கோவிந்தராஜ் என்னை அழைத்து சென்றார். கிருஷ்ணன் கோவில் தெருவில் உள்ள வீட்டிற்கு அழைத்து சென்றார். உயில் எழுதிய தேதியில் கோவிந்தராஜ் வரவில்லை. நான் வரைவு செய்யும் ஆவணங்களில் என் அலுவலகத்தில் தட்டச்சு செய்தால் வரைவு தயாரித்து தட்டச்சு செய்தவர் என மேற்குறிப்பு செய்து கையெழுத்து செய்வீர்களா என்றால், அவ்வாறு மேற்குறிப்பு செய்வதில்லை. வரைவு செய்தவர் யார் என்றும், தட்டச்சு செய்தவர் யார் என்றும், ஆவணகங்களில் மேற்குறிப்பு செய்யவேண்டும் என்றால் மேற்குறிப்பு செய்யலாம் செய்யாமலும் இருக்கலாம். யார் வரைவு தயாரித்தார்கள் என்பதை மேற்குறிப்பு செய்வதுதான் அந்த ஆவணத்தின் நம்பக தன்மையை உறுதிப்படுத்தும் என்றால், அது தேவையில்லை என்று நினைக்கிறேன். 4,5 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக இருக்கவேண்டும் என்பதற்காக, மழுப்பலாக பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வரைவு நான் தயாரித்தாக எழுதாததற்கு காரணம் ஒன்று இல்லை. நான் வரைவு தயாரிக்கவில்லை என்றும், என் அலுவலகத்தில் தட்டச்சு செய்யவில்லை என்றும், அதனால்தான் அது குறித்து நான் எழுதவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் அலுவலகத்தில் அப்போது வேலை பார்த்தவர் தட்டச்சு செய்தார். 12 வருடம் ஆகிவிட்டதால் பெயர் ஞாபகமில்லை. எனக்கு தெரிந்த வழக்கறிஞர்கள் ஆவணங்கள் தயாரித்து வந்து என்னிடம் சான்றோப்பம் கேட்டாள் நான் கையெழுத்து போட்டு தருவது வழக்கம் என்றால் சரியல்ல. நானே வரைவு தயாரித்து ஆவணம் தயாரித்தால் அதை நான் உறுதிப்படுத்த வேண்டும் என்றால், அவ்வாறு தேவையில்லை. ஆவணத்தை நோட்டரி செய்யும் போது ஆணவத்தை எழுதியவரின் கையொப்பத்தை நோட்டரி பதிவேட்டில் பெறவேண்டும் என்றால் சரிதான். இந்த ஆவணம் குறித்தும் நோட்டரி பதிவேட்டில் எழுதி இருக்கிறேனா என்றால், என்னால் 12 வருடம்

ஆகிவிட்டதால் அந்த பதிவேட்டை தேடி எடுக்கமுடியவில்லை. நோட்டரி பதிவேட்டை அவ்வப்போது ஆய்வுக்கு சமர்பிக்க வேண்டும் என்றால் அவ்வாறு கட்டாயமில்லை. நான் இந்த ஆவணம் குறித்து நோட்டரி பதிவேட்டில் எழுதவில்லை என்பதால் தான் மழுப்பலாக பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னவாறு ஆவணம் எழுதப்பட்டதால் தான் நோட்டரி பதிவேட்டில் எழுதவில்லை என்றும், நோட்டரி பதிவேட்டை தாக்கல் செய்தால் நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்கள் பொய் என தெரிந்துவிடும் என்பதால் மழுப்பலாக பதில்சொல்கிறேன் என்றால் சரியல்ல. 12 வருடங்களுக்கு முன்பு இருந்த இந்த ஆவணம் தொடர்புடைய காலத்திற்கான நோட்டரி பதிவேட்டை நான் தேடி பார்க்கவில்லை. நோட்டரி Attestation க்கு Fees collection பதிவேடு உள்ளது ஆனால் நான் பார்ட்டி கேட்டாள் ரசீது கொடுப்பேன். இதற்கு எவ்வளவு Fees வாங்கினேன் என்று அந்த பதிவேட்டை பார்த்தால் தான் தெரியும் என்றால், இந்த ஆவணத்திற்கு கட்டணம் பெற்றதை பதிவு செய்தேனா என்று ஞாபகம் இல்லை. உயில் ஆவணத்தை நோட்டரைஸ் செய்தால் அதற்கான முத்திரைவில்லை ஒட்ட வேண்டும் என்றால், உயில் ஆவணத்திற்கு ஒட்ட வேண்டிய அவசியமில்லை. உயில் ஆவணத்தை பதிவு செய்ய அறிவுறுத்தி இருக்கவேண்டும் என்றால் அது குறித்து உயிலை எழுதியவர்தான் முடிவு செய்யவேண்டும். உயிலை பதிவு செய்ய நான் ஆலோசனை செய்யவில்லை. உயில் எழுதியதாக சொல்லப்படும் இடத்தில் இருந்து சார் பதிவாளர் அலுவலகம் முக்கால் கிலோ மீட்டார்க்கும் குறைவான துாரத்தில் தான் உள்ளது. என் அலுவலகத்திற்கும் கிருஷ்ணன் கோவில் தெருவிற்கும் 3 கிலோ மீட்டர் துாரம் இருக்கும் என்றால், சுமார் 1 கிலோ மீட்டார் துாரம் இருக்கும். ஆவணங்களை எழுதி தருவதற்கு நான் முத்திரை தாள் வாங்கி கையிருப்பில் வைத்திருக்கும் பழக்கம் இல்லை. என் அலுவலகத்திற்கு அருகில் முத்திரை தாள் விற்பனையாளர் வீடு மற்றும் அலுவலகம் இருந்தது. நான் வரைவு தயாரித்து இருந்தால் முத்திரை தாளில் எழுதி இருப்பேன் என்றால் சரியல்ல. நான் வரைவு தயாரிக்கும் ஆவணங்களில் வரைவு தயாரித்தவர் என எழுதும் பழக்கம் எனக்கு இல்லை. உயில் எழுதியதாக சொல்லப்படும் நபர்தான் அதில் கையெழுத்திட்டார் என்பதை எதை வைத்து உறுதி செய்தேன் என்றால், கோவிந்தராஜ் அடையாளம் காட்டியதை வைத்து உறுதிசெய்தேன். வரைவு தயாரிக்கும்போது மாலை 4.45 அளவில் அவர் வீட்டிற்கு போனேன். உயில் எழுதிய தேதியில் கோவிந்தராஜ் அங்கு இல்லை. நான் அந்த வீட்டிற்கு போன போது சாட்சிகள் அங்கு இல்லை. அதன் பின்னர் தான் வந்தார்கள். அந்த வீட்டில் அவரது மனைவி மற்றும் மகன்கள் இருந்தார்தகளா என்றால் அவர் மட்டும் தான் இருந்தார். கோவிந்த ராஜ் அறிமுகப்படுத்த அழைத்து

சென்றபோது உயில் எழுதியவரின் மனைவி மற்றும் மகன்கள் இருந்தார்களா என்றால் நான் அவர்களை பார்க்கவில்லை. அந்த வீடு பச்சை கலர் ஆர்சிசி ஓட்டு வடக்கு பார்த்தவீடு என ஞாபகம் இருந்தது. சொத்து விபரம் சம்பந்தப்பட்ட விபரங்களை ஒரு தாளில் நான் குறித்து கொண்டேன். உயில் ஆவணம் தயாரித்து தரும் போது நோட்டரி பதிவேட்டில் வரிசை எண் போடும் பழக்கம் எனக்கு இல்லை. வ.சா.ஆ 12 ல் உள்ள கையொப்பங்கள் அதை எழுதியதாக சொல்லப்படும் ராதாகிருண்ணனால் போடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் உயில் ஆவணத்திற்கு நான் வரைவு தயாரிக்கவில்லை என்றும், சாட்சிகள் யாரும் என்முன்னிலையில் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 4,5 பிரதிவாதிகள் கேட்டுகொண்டதன் பேரில் இந்த வசா,ஆ 12 ஆவணத்தில் நான் வெறும் கையெழுத்து மட்டும் போட்டேன் என்றும், அந்த ஒரே காரணத்திற்காக சட்டதை பூர்த்தி செய்யும் விதமாக முதல் விசாரணையில் சொன்னது போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள். உயில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் வீட்டிற்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளன. அவர்களை யாரையும் சாட்சியாக அழைக்கவில்லை. நோட்டரி அட்டஸ்டு செய்தால் எந்தனை மணிக்கு கையொப்பயிட்டேன் என்று பதிவு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. உயில் எழுதியவரும், சாட்சிகளும் என்ன மையினால் கையொப்பம் செய்தார்கள் என்பதை ஆவணத்தை பார்த்துதான் சொல்ல முடியும். அனைவரும் ஒரே பேனாவில் தான் கையொப்பம் செய்தார்கள். சாட்சிகளின் முகவரிகளை யார் பதிவு செய்தார்கள் என்பது ஆவணத்தை பார்த்துதான் சொல்லமுடியும். ஆவணத்தை பார்த்து சாட்சிகளின் விலாசத்தை நான் பூர்த்தி செய்யவில்லை என்று சொல்கிறார். உயில் படி சொத்துகளை அவரது மகன் மற்றும் மனைவிக்கு எழுதியுள்ளார். மேலும் ஒரு சொத்தை அவரது மனைவியின் விருப்பம் போல் எழுதிக்கொள்ளலாம் உயிலில் சொல்லியுள்ளார். உயில் ஆவணத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தான் உயில் பயனாளர்கள் வேண்டுகோளின் பேரில் இந்த வழக்கில் வாதி கட்சிக்கு பதில் அளிக்கும் வகையில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்/A.மலர்விழி)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**